# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி

---

## திருவாய்மொழி தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தது

ப$_4$க்தாம்ருதம் விஶ்வ ஜநாநுமோத$_3$நம்
ஸர்வார்த்த$_2$த$_3$ம் ஸ்ரீஶட$_2$கோப வாங்க்மயம் |
ஸஹஸ்ர ஶாகோ$_2$பநிஷத் ஸமாக$_3$மம்
நமாம்யஹம் த்$_3$ராவிட$_3$ வேத$_3$ ஸாக$_3$ரம் ||

### ஈச்வரமுனிகள் அருளிச் செய்தது

திருவழுதி நாடு என்றும் தென்குருகூர் என்றும் *
மருவினிய வண்பொருநல் என்றும் * - அருமறைகள்
அந்தாதி செய்தான் அடி இணையே எப்பொழுதும் *
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து

### சொட்டை நம்பிகள் அருளிச் செய்தது

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும் *
இனத்தாரை அல்லாது இறைஞ்சேன் * - தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் * எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று

### அனந்தாழ்வான் அருளிச் செய்தது

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமானுச முனி தன் *
வாய்ந்த மலர்ப் பாதம் வணங்குகின்றேன் * - ஆய்ந்த பெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும் *
பேராத உள்ளம் பெற

### பட்டர் அருளிச் செய்தவை

வான் திகழும் சோலை மதிள் அரங்கர் வண்புகழ் மேல் *
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் * - ஈன்ற
முதல் தாய் சடகோபன் * மொய்ம்பால் வளர்த்த
இதத் தாய் இராமானுசன்

மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும் *
தக்க நெறியும் தடை ஆகித் - தொக்கியலும் *
ஊழ் வினையும் வாழ் வினையும் ஓதும் குருகையர் கோன் *
யாழின் இசை வேதத்து இயல்

---

### நம்மாழ்வார் அருளிச் செய்த

## திருவாய்மொழி
## முதல் பத்து
## மேன்மை உடைய மாதவனிடம் மயர்வற மதிநலம் மறப்பறப் பெறுதல்

## முதல் திருவாய்மொழி - உயர்வற உயர்நலம்
## எம்பெருமான் திருவடிகளிலே நித்ய கைங்கர்யம் பண்ணும்படி ஆழ்வார் தம் திருவுள்ளத்துக்கு உபதேசித்தல்

** உயர்வற உயர் நலம் * உடையவன் யவன் அவன் *
மயர்வு அற மதி நலம் * அருளினன் யவன் அவன் **
அயர்வு அறும் அமரர்கள் * அதிபதி யவன் அவன் *
துயரறு சுடர் அடி * தொழுது எழு என் மனனே! 1

மனன் அகம் மலம் அற * மலர் மிசை எழு தரும் *
மனன் உணர்வு அளவிலன் * பொறி உணர்வு அவை இலன் **
இனன் உணர் முழு நலம் * எதிர் நிகழ் கழிவினும் *
இனன் இலன் எனன் உயிர் * மிகுநரை இலனே 2

இலன் அது உடையன் இது * என நினைவு அரியவன் *
நிலன் இடை விசும்பிடை * உருவினன் அருவினன் **
புலனொடு புலன் அலன் * ஒழிவிலன் பரந்த * அந்
நலன் உடை ஒருவனை * நணுகினம் நாமே 3

நாம் அவன் இவன் உவன் * அவள் இவள் உவள் எவள் *
தாம் அவர் இவர் உவர் * அது இது உது எது **
வீம் அவை இவை உவை * அவை நலம் தீங்கவை *
ஆம் அவை ஆய் அவை * ஆய் நின்ற அவரே 4

அவரவர் தமதமது * அறிவறி வகை வகை *
அவரவர் இறையவர் * என அடி அடைவர்கள் **
அவரவர் இறையவர் * குறைவிலர் இறையவர் *
அவரவர் விதி வழி * அடைய நின்றனரே 5

நின்றனர் இருந்தனர் * கிடந்தனர் திரிந்தனர் *
நின்றிலர் இருந்திலர் * கிடந்திலர் திரிந்திலர் **
என்றுமொர் இயல்வினர் * என நினைவு அரியவர் *
என்றுமொர் இயல்வொடு * நின்ற எம் திடரே 6

திட விசும்பு எரி வளி * நீர் நிலம் இவை மிசை *
படர் பொருள் முழுவதுமாய் * அவை அவை தொறும் **
உடல் மிசை உயிர் எனக் * கரந்து எங்கும் பரந்துளன் *
சுடர் மிகு சுருதியுள் * இவை உண்ட சுரனே 7

சுரர் அறிவு அரு நிலை * விண் முதல் முழுவதும் *
வரன் முதலாய் அவை * முழுதுண்ட பரபரன் **
புரம் ஒரு மூன்று எரித்து * அமரர்க்கும் அறிவு இயந்து *
அரன் அயன் என * உலகு அழித்து அமைத்து உளனே 8

உளன் எனில் உளன் * அவன் உருவம் இவ்வுருவுகள் *
உளன் அலன் எனில் * அவன் அருவம் இவ்வருவுகள் **
உளன் என இலன் என * இவை குணம் உடைமையில் *
உளன் இரு தகைமையொடு * ஒழிவு இலன் பரந்தே 9

பரந்த தண் பரவையுள் * நீர் தொறும் பரந்துளன் *
பரந்த அண்டம் இதென * நில விசும்பு ஒழிவற **
கரந்த சில் இடம் தொறும் * இடம் திகழ் பொருள் தொறும் *
கரந்து எங்கும் பரந்துளன் * இவை உண்ட கரனே 10

** கர விசும்பு எரி வளி * நீர் நிலம் இவை மிசை *
வரனவில் திறல் வலி * அளி பொறையாய் நின்ற **
பரன் அடி மேல் * குருகூர்ச் சடகோபன் சொல் *
நிரனிறை ஆயிரத்து * இவை பத்தும் வீடே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---